**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | Crl.M.P.No. 2395/2024 |
| Prosecution Witness | : | **ம.சா.**6 |
| Name | : | **கனகராஜ்** |
| Father's / Husband Name | : | **எல்லமுத்து** |
| Address | : | **அம்மாபாளையம்** |
| Age | : | 60/2025 |

**தேதி : 07.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். புகார்தாரர் துரைராஜ் என்பவரை தெரியும். அவர் என் உடன் பிறந்த தம்பி ஆவார். எங்கள் ஊரில் திருவிழா நடந்தது. 13.05.2018 அன்று மாரியம்மன்கோவில் திருவிழாவிற்காக பூக்கூடை எடுத்துக்கொண்டு இரவு 10.30 மணிக்கு நானும், என்தம்பி துரைராஜ்மற்றும் எங்கள் தெருவை சேர்ந்த 10, 15 பேர்கள் நடந்துசென்றுக்கொண்டிருந்தபோது எங்களை வெள்ளைச்சாமி, பாஸ்கர், குமார், கலைச்செல்வன் ஆகியோர்கள் வழிமறித்து இந்த பாதை எங்களுக்கு சொந்தமானதா அல்லது குண்டுமணி வீட்டிற்கு சொந்தமான பாதையா என்று பதில் சொல்லிவிட்டு போங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் திருவிழா முடிந்தபிறகு அதைபற்றி பேசிக்கொள்ளலாம் என்று சொன்னோம். அப்போது மேற்படி நான்கு பேர்கள் துரைராஜை அசிங்கமாக திட்டினார்கள். தடியால் துரைராஜை அடித்தார்கள். அவருக்கு தலையில் அடிப்பட்டது. நாங்கள் சண்டையை விலக்கிவிட்டு அழைத்துவந்தோம். துரைராஜை அம்மாபாளையம்

மருத்துவமனையில் சேர்த்தோம். அதன்பிறகு சம்பவம் குறித்து புகார் கொடுக்கலாம் என்று பேசினோம். திருவிழா நடந்துகொண்டிருந்ததால் திருவிழா முடிந்தபிறகு புகார் கொடுக்கலாம் என்று இருந்தோம். ஆனால் அதற்குள் வெள்ளைச்சாமி குடும்பத்தை சேர்ந்தவர்கள் புகார் கொடுத்துவிட்டார்கள். திருவிழா முடிந்தபிறகு எங்கள் தரப்பில் துரைராஜ் புகார் கொடுத்தார்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.